டப்பாங்கூத்துப் பாட்டுத்தான்
காதில கொஞ்சம் போட்டுப்பாரு -இது
டப்பாங்கூத்துப் பாட்டுத்தான்
காதில கொஞ்சம் போட்டுப்பாரு

குட்டிக்கண்ணன் றோட்டில
வந்து நிண்டு பாட்டில
நாட்டுக்காக செய்தியொன்று
சொல்லிறன் தெருக்கூத்தில 2

டப்பாங்கூத்துப் பாட்டுத்தான்

நாடும் வீடும் எங்களுக்கு ரெண்டு கண்ணுதானே -நாம்
சொந்தமென்று சொல்ல இந்த மண்ணும் ஒன்றுதானே 2
மானத்துக்குப் பேரெடுத்த நாங்கள் கவரிமானே 2
இதுபுரிஞ்சா இது தெரிஞ்சா புலிநடையப் போடு

டப்பாங்கூத்துப் பாட்டுத்தான்

அக்கா என்ன வெக்கத்தில தரையப் பாக்கிறீங்க
அண்ணே என்ன வளைஞ்சு குனிஞ்சு தலையச் சொறியிறீங்க 2
காலம் உங்களை நம்பித்தானே காத்திருக்குதிங்க 2
இது புரிஞ்சா இது தெரிஞ்சா புலி நடையப் போடு

டப்பாங்கூத்துப் பாட்டுத்தான்

நாங்கள் வாழவேண்டுமென்றால் நாடுமீள வேண்டும் -எங்கள்
நாடுமீள வேண்டுமென்றால் வேங்கையாக வேண்டும் 2
அண்ணன் பேரைச் சொல்லிப்பாரு உன்னில் வீரம் ஏறும் 2
இதுபுரிஞ்சா இது தெரிஞ்சா புலி நடையப்போடு

டப்பாங்கூத்துப் பாட்டுத்தான்